**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, KUNNAM**

**PRESENT: THIRU.R.RAJASEKARAN, L.L.M.,**
**District Munsif Cum Judicial Magistrate,**
**Kunnam.**

**<u>CASE SUMMARY</u>**

**C.C.71/2024**

**CNR NO.TNPB09-000826-2024**

| | | |
|---|---|---|
| 1. | The Period of remand of the accused | A2 released on 15.06.2021 (AB) |
| 2. | The date of filing of the complaint/final report in the court | 26.05.2021/14.07.2021 |
| 3. | The date of committal of the case to the Court of Session | --- |
| 4. | The date of questioning of the accused u/s.294(b), 324, 506(ii) of IPC of the Code of Criminal Procedure, 1973, as the case may be | 02.03.2026 |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts; except routine petitions like petitions u/s.317 of the code | MP.No.1/2026 - U/s.320(1) Cr.P.C. – dismissed on 02.03.2026.<br>M.P.No.2/2026 – 317(2) BNSS – Allowed on 02.03.2026. |
| 6. | Date of examination in chief and cross examination of a witness | PW1 to PW5 Chief & Cross examined on 03.03.2026 |
| 7. | Date of examination of the accused U/s.313(i)(b) Cr.P.C. / u/s.351(1)(b) of B.N.S.S | 09.03.2026 |
| 8. | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and | NIL |
| 9. | Grant of stay by superior courts and the results thereof | NIL |

RAJASEKARAN District Munsif cum Judicial Magistrate
Digitally signed by RAJASEKARAN
Location: Kunnam
Date: 2026.03.05 15:36:58 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Kunnam.

Date : 09.03.2026

DM cum JM, Kunnam

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**முன்னிலை : திரு.இரா.இராஜசேகரன், எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நீதித்துறை நடுவர், குன்னம்.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் திங்கட்கிழமை

**2057** திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் மாசி மாதம் **25** ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.71/2024**
**CNR NO.TNPB09-000826-2024**

தமிழ்நாடு அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
மங்களமேடு காவல் நிலையம்,
குற்ற எண்.385/2021 – குற்றமுறையீட்டாளர்

/ எதிர் /

***1. செல்லமுத்து (52/2021) (Split up in CC 69/2026)***
***த/பெ. சிதம்பரம்***
2. ராமசாமி (47/2021)
த/பெ. சிதம்பரம்
***3. கொளஞ்சியப்பா (45/2021) (இறந்துவிட்டார்)***
***த/பெ. சிதம்பரம்***
பெருமத்தூர்
குன்னம் வட்டம்
பெரம்பலூர் மாவட்டம் – 2 ஆம் எதிரி

இந்த வழக்கு கடந்த 27.05.2024 ஆம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு, என் முன்னால் 09.03.2026 ஆம் தேதியான இன்று இறுதி விசாரணைக்கு வந்ததில், அரசு தரப்பில் திரு.S சண்முகராஜ், அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – I அவர்கள் ஆஜராகியும், 2 ஆம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.P.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், 3 ஆம் எதிரி இறந்துவிட்ட நிலையிலும், 1 ஆம் எதிரி தொடர்ந்து இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அவருக்கெதிரான வழக்கு CC 69/2026 என தனியே பிரிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்களை கேட்டும் வழக்காவணங்களை

பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற சீரிய பரிசீலனையில் இருந்து, இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**தீர்ப்புரை**

**1) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

கடந்த 24.05.2021 ஆம் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் அந்த பிரச்சனைக்குரிய இடத்திலிருந்த கருவேல மரத்தினை கொளஞ்சியப்பா வெட்டியதாக கேள்விப்பட்ட வாதியின் கணவரான பாலகிருஷ்ணன் என்பவர் பெருமத்தூரிலுள்ள வாதியின் வீட்டருகே உள்ள இடத்தில் நின்றிருந்த எதிரிகளிடம் நியாயம் கேட்க சென்றபோது சிதம்பரம் மகன்களான 1 முதல் 3 எதிரிகள் சேர்ந்து கொண்டு வாதியின் கணவரை தேவடியா மகனே உனக்கு என்னடா வந்துச்சு என்று அசிங்கமாக திட்டியும், கீழே கிடந்த கட்டையை எடுத்து கொளஞ்சியப்பாவும், ராமசாமியும் பாலகிருஷ்ணனை அடித்தும், செல்லமுத்து கையால் அடித்தும் வாதியின் கணவருக்கு சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் வாதியின் கணவரை பார்த்து என்றைக்கு இருந்தாலும் உனக்கு எங்க கையால தான்டா சாவு என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளதாகவும், எனவே, 2, 3 எதிரிகள் மீது இ.த.ச.294(b), 324, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழும், 1 ஆம் எதிரி மீது இ.த.ச.294(b), 323, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழும் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக குன்னம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் 1 முதல் 3 எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2) பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 230 கீழ் நகல் வழங்குதல் :**

இவ்வழக்கில் 1 முதல் 3 எதிரிகளுக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி 1 ஆம் எதிரி தொடர்ந்து இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அவருக்கெதிராக இவ்வழக்கு C.C.69/2026 என தனியே பிரிக்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கு நிலுவை காலத்தில் 3 ஆம் எதிரி இறந்துவிட்டதால் அவருக்கெதிரான இவ்வழக்கு அற்றுப் போய்விட்டது. 2 ஆம் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானார். 2 ஆம் எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 230 இன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3) குற்றச்சாட்டு வனைந்து குற்றம் பற்றி வினவுதல் :**

2 ஆம் எதிரிக்கு போதுமான கால அவகாசம் அளித்து அதன் பின்னர் ஆவணங்களின் பரிசீலனையின் பேரில், 2 ஆம் எதிரி மீது இ.த.ச.294(b), 324, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கி கூறி வினவியபோது, 2 ஆம் எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரணை வேண்டினர். அதன் பின்னர் அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**4) அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்:**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2 ஆம் எதிரி தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**5) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:**

5(i) இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் லெட்சுமி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில், சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒருநாள் தேதி மாதம் நினைவில்லை, மாலை 6 மணிக்கு சுமார் 7, 8 பேர் கூட்டமாக எனது வீட்டின் முன்பாக இருந்தார்கள் என்றும், அப்போது கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் தன்னையும், தன் கணவரையும் அடித்துவிட்டார்கள் என்றும், கூட்டமாக இருந்ததால் யார் அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், மேற்படி சம்பவத்தில் காயம்பட்ட தானும், தனது கணவரும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றும், சிகிச்சை முடித்து மங்களமேடு காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தேன் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், மேற்படி புகாரில் உள்ள விபரங்கள் தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

5(ii) இவ்வழக்கில் காயமுற்ற சாட்சியான பாலகிருஷ்ணன் என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.2 தனது சாட்சியத்தில் சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒருநாள் தேதி மாதம் நினைவில்லை, மாலை 6 மணிக்கு சுமார்

7, 8 பேர் கூட்டமாக எனது வீட்டின் முன்பாக இருந்தார்கள் என்றும், அப்போது கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் தன்னையும், தன் மனைவியையும் அடித்துவிட்டார்கள் என்றும், கூட்டமாக இருந்ததால் யார் அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், மேற்படி சம்பவத்தில் காயம்பட்ட தானும், தனது மனைவியும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றும், சிகிச்சை முடித்து மங்களமேடு காவல் நிலையத்தில் சென்று அ.சா.1 புகார் கொடுத்தார் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

5(iii) இவ்வழக்கின் பார்வை மகசர் சாட்சியான தமிழரசி என்பவர் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.3 தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையெழுத்தை சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், இரவு 11 மணிக்கு தனது வீட்டில் வந்து போலிசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், தன்னுடன் தனது அக்கா மகன் மணிகண்டன் என்பவரும் கையெழுத்து செய்தார் என்றும், அதில் என்ன எழுதி உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், பார்வை மகஜரில் நான் முதலாவது கையெழுத்தும் 2 வது கையெழுத்து மணிகண்டன் என்பவரும் செய்தோம் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(iv) இவ்வழக்கின் பார்வை மகசர் சாட்சியான சூர்யா என்பவர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.4 தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள 2-வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேற்படி கையெழுத்தை சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை, இரவு 11 மணிக்கு தனது வீட்டில் வந்து போலிசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், தன்னுடன் தனது பெரியம்மா தமிழரசி என்பவரும் கையெழுத்து செய்தார் என்றும், அதில் என்ன எழுதி உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், பார்வை மகஜரில் தான் முதலாவது கையெழுத்தும், 2 வது கையெழுத்து மணிகண்டன் என்பவரும் செய்தோம் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(v) இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக உதவி ஆய்வாளர் திரு.கலியமூர்த்தி, அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.5 தனது நீதிமன்ற சாட்சியத்தில், உதவி ஆய்வாளர் திருமதி.செந்தமிழ்செல்வி தற்போது அயல்பணியாக சென்றுள்ளதால், அவரது கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்றும், தான் வழக்குக் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 26.05.2021 ம் தேதி லெட்சுமி க/பெ. பாலகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப மங்களமேடு காவல் நிலைய குற்ற எண். 385/2021, இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் தமிழரசி, சூர்யா என்பவர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் எதிரிகள் மூவரும் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும், சாட்சிகள் லெட்சுமி, தமிழரசி, மணிகண்டன், பூவா, பாலகிருஷ்ணன், ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்து சூர்யா என்பவர் குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரியவந்ததால் அவரை இவ்வழக்கில் இருந்து நீக்கம் செய்து நீக்கல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கில் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேற்கண்ட அதே பிரிவுகளின் கீழ் 14.07.2021 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6) பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 351 (1) (ஆ)இன் கீழ் வினவுதல் :**

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிந்த பின்னர், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் 2 ஆம் எதிரிக்கு பாதகமான சங்கதிகளை விளக்கி கூறி பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 351 (1) (ஆ) – இன் கீழ் விசாரித்த போது 2 ஆம் எதிரி சாட்சிகள் கூறியது பொய் என்று தெரிவித்துள்ளார். மேலும், 2 ஆம் எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சியம் இல்லை என தெரிவித்தார்.

**7) அரசுத் தரப்பு வாதம்:**

கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர், தனது வாதத்தின்போது, அரசு தரப்பு சாட்சிகள் 2 ஆம் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாலும், மேலும், சான்றாவணங்கள் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.9 வரையில் குறியீடு செய்யப்பட்டுள்ளதாலும், 2 ஆம் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதம் செய்துள்ளார்.

**8) 2 ஆம் எதிரி தரப்பு வாதம் :**

2 ஆம் எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தின் போது, சாட்சிகள் வழக்குச் சம்பவம் பற்றி சாட்சியம் அளிக்காததாலும், சாட்சிகள் புலன் விசாரணை அதிகாரியிடம் விசாரணையின்போது கொடுத்த வாக்குமூலத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், கூடுதல் சாட்சி அ.சா.5 இன் சாட்சியத்தின் அடிப்படையில் 2 ஆம் எதிரி குற்றவாளி என தீர்மானிக்க போதுமான சாட்சிய சான்றாவணங்கள் இல்லாத நிலையில், 2 ஆம் எதிரி மீதான அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று வாதம் செய்துள்ளார்.

**9)** இந்த வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், 2 ஆம் எதிரி மீதான இ.த.ச.294(b), 324, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய சங்கதிகள் ஆகும்.

**<u>தீர்வு</u>**

**10)** இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சம்பவம் குறித்து நீதிமன்றம் நம்பத்தகுந்த வகையிலும், எவ்வித முரண்பாடுகள் இல்லாமலும், பொருண்மையை ஒரேவிதமாக குறிப்பிட்டு அமைய வேண்டும். அந்த வகையில் இவ்வழக்கின் சாட்சியங்கள் மேற்படி வகைமுறைகளுக்கு உட்பட்டு அமைந்திருக்கிறதா? என்பதே பரிசீலிக்கப்பட வேண்டும்.

**11) (i)** மேற்படி அ.சா.1 தனது புகார் மனுவில் "கடந்த 24.05.2021 ஆம் தேதி மாலை சுமார் 05.30 மணியளிவல் பிரச்சனைக்குரிய இடத்திலிருந்த கருவேல மரத்தினை 3 ஆம் எதிரி வெட்டியதாக கேள்விப்பட்ட வாதி லெட்சுமியின்

கணவரான பாலகிருஷ்ணன் பெருமத்தூரில் உள்ள வாதியின் வீட்டின் அருகே உள்ள இடத்தில் நின்றிருந்த எதிரிகளிடம் நியாயம் கேட்க சென்றபோது 2 ஆம் எதிரி பிற எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு வாதியின் கணவரை தேவடியா மகனே உனக்கு என்னடா வந்துச்சு என்று அசிங்கமாகத் திட்டியும், கீழே கிடந்த கட்டையை எடுத்து 2 ஆம் எதிரி 3 ஆம் எதிரியுடன் சேர்ந்து பாலகிருஷ்ணனை அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், 2 ஆம் எதிரி பிற எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு வாதியின் கணவரை பார்த்து என்றைக்கு இருந்தாலும் உனக்கு எங்க கையால தான்டா சாவு என்று கொலை மிரட்டல் விடுத்தார்" என புகார்வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

**11) (ii)** மேற்படி அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் சுமார் 7, 8 பேர் கூட்டமாக எனது வீட்டின் முன்பாக இருந்தார்கள் என்றும், அப்போது கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் தன்னையும், தன் கணவரையும் அடித்துவிட்டார்கள் என்றும், கூட்டமாக இருந்ததால் யார் அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், புகார் மனுவில் உள்ள தனது கையெழுத்தை மட்டும் ஒப்புக் கொண்டு, மேற்படி புகாரில் உள்ள விபரங்கள் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 லெட்சுமி என்பவரின் நீதிமன்ற சாட்சியத்தை நன்கு பரிசீலனை செய்கையில், 2 ஆம் எதிரி பிற எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு தன்னையோ, தனது கணவரையோ பொது இடத்தில் வைத்து ஆபாச வார்த்தைகளால் திட்டினார்கள் என்றோ மற்றும் அதனால் மற்றவர்களுக்கு தொல்லைதரும் விதமாக ஆபாச பேச்சு இருந்தாகவோ, 2 ஆம் எதிரி கீழே கிடந்த கட்டையால் அ.சா.2 ஐ தாக்கி சொற் பாயத்தை ஏற்படுத்தியதாகவோ, அ.சா.2 க்கு 2 ஆம் எதிரி கொலை மிரட்டல் விடுத்தார் என்றோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி அ.சா.1 ஐ பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோதும், அரசுத் தரப்பு வழக்கை ஒத்துரைக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.1 ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் விதமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11) (iii)** சம்பவத்தை காயமுற்ற சாட்சியான பாலகிருஷ்ணன் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.2 தனது சாட்சியத்தில், யாரோ தன்னையும் தன் மனைவியையும் வீட்டின் முன்பாக இருந்தபோது அடித்துவிட்டதாகவும், கூட்டமாக இருந்ததால் யார் என்று தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.2 இன் நீதிமன்ற சாட்சியத்தை நன்கு பரிசீலனை செய்கையில், 2 ஆம் எதிரி தன்னையோ, அ.சா.1 ஆன தன் மனைவியையோ பொது இடத்தில் வைத்து ஆபாச வார்த்தைகளால் திட்டினார்கள் என்றோ மற்றும் அதனால் மற்றவர்களுக்கு தொல்லைதரும் விதமாக ஆபாச பேச்சு இருந்தாகவோ, 2 ஆம் எதிரி தன்னை கட்டையால் தாக்கி சொற்ப காயம் ஏற்படுத்தியதாகவோ, 2 ஆம் எதிரி தனக்கு கொலைமிரட்டல் விடுத்தார் என்றோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி, அ.சா.2 அரசுத் தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசுத் தரப்பு வழக்கை ஒத்துரைக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, மேற்படி அ.சா.2 இன் சாட்சியம் அரசுத் தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் விதமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11) (iv)** மேலும், மேற்படி வழக்கின் பார்வை மகசர் சாட்சிகளான தமிழரசி, சூரியா ஆகியோர் அரசுத் தரப்பில் அ.சா.3, அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர். மேற்படி அ.சா.3, அ.சா.4 ஆகியோர் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில், போலீசார் தங்களின் வீட்டில் இருந்ததபோது கையெழுத்து மட்டும் வாங்கினார்கள் என்றும், அதில் என்ன எழுதப்பட்டது என்று தெரியாது என்றும், சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி அ.சா.3, அ.சா.4 ஆகியோர்களை அரசுத் தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்கையில், போலீசார் சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.3, அ.சா.4 ஆகியோர் சாட்சியம் அரசுத் தரப்பு வழக்கை ஒத்துரைக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளின் நீதிமன்ற சாட்சியம் மற்றும் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.9 வரையிலான இவ்வழக்காவணங்கள் ஆகியவற்றையும் நன்கு பரிசீலனை செய்கையில், நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1,

காயமுற்ற சாட்சியான அ.சா.2 ஆகிய சாட்சிகள் தங்கள் நீதிமன்ற சாட்சியத்தில், 2 ஆம் எதிரி தங்களை ஆபாச வார்த்தைகளால் திட்டினார் என்றோ, கட்டையால் அ.சா.2 ஐ தாக்கி சொற்ப காயம் ஏற்படுத்தியதாகவோ, 2 ஆம் எதிரி அ.சா.2 க்கு கொலைமிரட்டல் விடுத்தார் என்றோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறி முன்னுக்குபின் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர்.

13) மேலும், மாண்பமை உச்சநீதிமன்றம் தரப்பினர்கள் தங்களுக்கிடையே சமாதானம் செய்து கொண்ட நிலையில் அந்த குற்றத்தின் தன்மை, பொது நலனை பாதிக்காது என்ற நிலையில் இருந்தால், அது போன்ற வழக்குகளை தொடர்ந்து நிலுவையில் வைத்திருப்பதால் எவ்வித பலனும் ஏற்பட போவதில்லை என்றும், அந்த சமாதானத்தின் அடிப்படையில் வழக்கை முடிவுக்கு கொண்டு வரலாமென Dr.Arvind barsaul Etc – Vs – State of Madhyapradesh and Another என்ற வழக்கில் தீர்வு கண்டுள்ளது. மேற்கூறிய நமது மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் படியும், இவ்வழக்கில் தரப்பினர்கள் சமாதானம் செய்து கொண்டதாலும், நீதியின் நலன் கருதி அரசு தரப்பில் பிறசாட்சிகளின் சாட்சிகள் நீக்கறவு செய்துகொண்டு, கூடுதல் சாட்சி அ.சா.5 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார், மேலும் இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையிலும் அரசு தரப்பில், 2 ஆம் எதிரி மீதான இ.த.ச.294(b), 324, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14) இறுதியாக, 2 ஆம் எதிரி மீதான இ.த.ச.294(பி), 324, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்களை அரசுத் தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை 2 ஆம் எதிரிக்கு அளித்து, மேற்படி குற்றச்சாட்டுக்களின்படி, 2 ஆம் எதிரி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து 2 ஆம் எதிரியை பாரதீய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 271(i)இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும், 1 ஆம் எதிரிக்கு எதிராக இவ்வழக்கு CC 69/2026 என தனியே பிரிக்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கு நிலுவை காலத்தில் 3 ஆம் எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் அற்றுப் போய்விட்டது.

15) 2 ஆம் எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் இரத்து செய்யப்பட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

16) இந்த வழக்கில் வழக்கு சொத்து எதுவுமில்லாததால் வழக்கு சொத்து குறித்து உத்தரவு எதுவுமில்லை.

17) இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 லெட்சுமி, காயம்பட்ட சாட்சியான அ.சா.2 பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளதால், பாரதீய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 396 இன் கீழ் மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவிற்கு நஷ்ட ஈட்டிற்காக பரிந்துரை செய்ய வேண்டியதில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப்பகரப்பட்டது.

RAJASEKARAN District Munsif cum Judicial Magistrate Digitally signed by RAJASEKARAN Location: Kunnam Date: 2026.03.05 15:36:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், குன்னம்.

**இணைப்பு**

**1. அரசு தரப்பில் விசாரித்துக்கொள்ளப்பட்ட சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | -- | லெட்சுமி |
| அ.சா.2 | -- | பாலகிருஷ்ணன் |
| அ.சா.3 | -- | தமிழரசி |
| அ.சா.4 | -- | சூர்யா |
| அ.சா.4 | -- | கலியமூர்த்தி (உதவி ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | -- | புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.2 | -- | பார்வை மகசரில் உள்ள அ.சா.3 இன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 | -- | பார்வை மகசரில் உள்ள அ.சா.3 இன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.4 | -- | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.5 | -- | புகார் |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.6 | -- | மாதிரிவரைபடம் |
| அ.த.சா.ஆ.7 | -- | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.8 | -- | விபத்துப் பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.த.சா.ஆ.9 | -- | எதிரி நீக்கல் அறிக்கை |

**3. அரசு தரப்பு சான்று பொருட்கள் : இல்லை.**

**4. எதிரிகள் தரப்பு சாட்சி : இல்லை.**

**5. எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை.**

**6. எதிரிகள் தரப்பு சான்றுபொருட்கள் : இல்லை**

RAJASEKARAN District Munsif cum Judicial Magistrate
Digitally signed by RAJASEKARAN
Location: Kunnam
Date: 2026.03.05 15:36:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், குன்னம்.

குறிப்பு

1. விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

Particulars Under Rule 106 of Criminal Rules of Practice 2019
Description of the accused

| S No. | Cr.No. | Name of the Police | Name of the accused | Father's name | Occupation | Residency | Age |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 385/2021 | Mangalamedu P.S. | Chellamuthu | Chidhambaram | ***Split up in C.C.69/2026*** | | |
| 2. | | Mangalamedu P.S. | Ramasamy | Chidhambaram | -- | Perumathur Village, Kunnam TK | 47/2021 |
| 3. | | Mangalamedu P.S. | Kolanjiappa | Chidhambaram | ***Died*** | | |

Date of

| Occurrence | complaint | Apprehension | Release on bail | Commitment | Commence of Trial | Close of trial | Sentence or order | Service of copy of Judgment on accused | Explana-tion of delay |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 24.05.2021 | 26.05.2021 | 02.03.2026 | 15.06.2021 (AB) | Not applicable | 03.03.2026 | 03.03.2026 | 09.03.2026 | - | No delay |

Judgment typed and Uploaded by – Steno-Typist

Date : 09.03.2026 DM cum JM, Kunnam